www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

பதிவு எண்

## தமிழ்

நேரம் : 3.00 மணி

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. 15 x 1 = 15

1. உனதருளே பார்ப்பன் அடியேனே - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ______.

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

3. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே ______.

அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல், பாடிய

இ) கேட்டவர், பாடிய ஈ) பாடல், கேட்டவர்

4. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

அ) இலையும், சருகும் ஆ) தோகையும், சண்டும்

இ) தாளும், ஓலையும் ஈ) சருகும் சண்டும்

5. "பெரிய மீசை சிரித்தார்" - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

6. அருந்துணை என்பதைப் பிரித்தால் ______.

அ) அருமை + துணை ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை

7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

8. தென்னன் என்று குறிப்பிடப்பட்ட மன்னன்

அ) பாண்டியன் ஆ) சேரன் இ) சோழன் ஈ) பல்லவன்

9. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி ______.

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கொந்தளித்தல்

10. காசி காண்டம் என்பது ______.

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

இ) காசி நகரத்தை வழிப்படுத்தும் நூல்

ஈ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
 அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
 இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

*பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.*

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்.

12. இப்பாடலில் இடம்பெற்றுள்ள நூல் எது?
13. இப்பாடநூலின் ஆசிரியர் யார்?
14. பாடலில் உள்ள அடியெதுகையை எழுதுக.
15. ஊழ் ஊழ் - இலக்கணக்குறிப்பு தருக.

பகுதி - II

பிரிவு - 1

4 x 2 = 8

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(21-ஆவது வினாவிற்கு மட்டும் கட்டாயமாக விடையளிக்கவும்)

16. வசன கவிதை - குறிப்பு வரைக.
17. செய்குத்தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
20. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
21. "கண்" என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 2

5 x 2 = 10

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

22. வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
23. *இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
 மலை - மாலை
24. வருக - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. *கலைச்சொற்கள் தருக :*
 அ) Modern literature ஆ) Myth
26. *கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.*
 அ) உழவர்கள் மலையில் உழுதனர்.
 ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
27. *சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.*
 தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, வான், பூ, மேகலை, செய், பொன்
28. *சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.*
 அ) இன்சொல் ஆ) பூங்குழலி வந்தாள்

பகுதி - III

பிரிவு - 1

2 x 3 = 6

இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடையளி.

29. சோலைக் காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல ஓர் உரையாடல் அமைக்க.

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



30. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது - இதுபோல் இளம்பயிர் வகை ஐந்து பெயர்களை எழுதுக.

31. *உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*

நான் மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது. என்னுடைய மேலடுக்கில் உள்ள ஓசோன் படலத்தின் மூலம் கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கும் அரணாக விளங்குகின்றேன். புவியை ஒரு போர்வை போலச் சுற்றிக் கிடந்து பரிதியின் கதிர் சூட்டைக் குறைத்துக் கொடுக்கின்றேன். உங்கள் வசதிக்காக என்னை வைத்து குளோரோ புளோரோ கார்பன் என்னும் நச்சுக் காற்றை வெளிவிடும் இயந்திரங்களான குளிர்பதனப் பெட்டி முதலானவற்றை உருவாக்கியிருக்கிறீர்கள்.

அ) நான் மாசுபடுவதால் என்ற தொடரில் நான் என்பது இங்கு எதனைக் குறிக்கிறது?

ஆ) ஓசோன் படலத்தின் பணி யாது?

இ) குளிர்பதனப் பெட்டி வெளியிடும் நச்சு வாயுவின் பெயர் என்ன?

## பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x3=6

(34-ஆவது வினாவிற்கு மட்டும் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

32. உங்களுடன் பயிலும் மாணவன் ஒருவர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வாறு எடுத்துரைப்பீர்கள்?

33. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பங்கினை விளக்குக.

34. 'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடலை அடி மாறாமல் எழுதுக.

## பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2x3=6

35. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பன் இலானும் கெடும் - அலகிட்டு வாய்பாடு எழுதுக.

36. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

37. ஆலத்து மேல குவளை குளத்துள்
வாலின் நெடிய குரங்கு - இப்பாடலின் அமைந்துள்ள பொருள் கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5x5=25

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்ந்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

*(அல்லது)*

ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

*(அல்லது)*


ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. திருவள்ளூர் மாவட்டம், கதவு எண் 58/14, நேரு தெரு, கண்ணன் மகள் கீதா திருவள்ளூர் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புவதால், தேர்வர் தன்னைக் கீதாவாக எண்ணி கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்புக.

42. அ) பள்ளியில் நான், வீட்டில் நான் - என்னும் தலைப்புகளில் நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் நடந்து கொள்ளும் முறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்.

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. - Nelson. Mandela
2. Language is the road map of culture. It tells you where its people come from and where they are going. - Rita Mae Brown

பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 x 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

ஆ) கல்வியின் அவசியம் குறித்துக் கூறும் புதிய நம்பிக்கை கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - தமிழன் அறிவியலின் முன்னோடி - விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் - விண்ணியல் அறிவியல் - நமது கடமை - முடிவுரை.

(அல்லது)

ஆ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

******

CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com